O.S.37-2016

# முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை

அ.வ.எண்.37/2016

வாதி தரப்பு 1வது சாட்சி பழனிச்சாமி என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. கங்காலெட்சுமி, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க்(பொறுப்பு) என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. பழனிச்சாமி | வயது | : | 65/26 |
| தகப்பனார் பெயர் | : | முனியன் | தாலுகா | : | விராலிமலை |
| கிராமம் | : | காரப்பட்டு | தொழில் | : | விவசாயம் |

நாள்-16.03.2026

வா.சா.1

**<u>6, 14 முதல் 17 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1) 1ம் பிரதிவாதி எனது உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் மகன் என்றால் சரிதான். இருவரும் தற்போது உயிருடன் இல்லை என்றாலும், அவர்கள் கொலை செய்யப்பட்டார்கள் என்றாலும் சரிதான்.

2) தாவா சொத்துக்கள் அனைத்தும் பூர்வீக சொத்துக்கள் இல்லை.

3) எந்தெந்த சொத்துக்கள் கிரையம் வாங்கப்பட்டது என்றால் குறிப்பிட்டு சொல்ல முடியாது.

4) பூர்வீக சொத்துக்களில் விவசாயத்தின் மூலம் வருமானம் பெறப்பட்டது என்பதையும், எந்தெந்த சொத்துக்கள் அந்த வருமானத்தின் அடிப்படையில் வாங்கப்பட்டது என்பதையும் குறிப்பிட்டு சொல்ல முடியாது.

5) பூர்வீக சொத்துக்கள் மிகவும் குறைவானது என்றாலும், அதில் இருந்து எந்த வருமானமும் கிடையாது என்றாலும், அந்த வருமானத்தின் அடிப்படையில் சொத்துக்கள் எதுவும் வாங்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. பூர்வீக சொத்துக்களிலிருந்து வருமானம் எதுவும் இல்லை என்பதால் தான் என்னால் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

6) வீராச்சாமி அரசு ஒப்பந்ததாரர் என்றால் சரியல்ல. நானும், வீராச்சாமியும் சேர்ந்துதான் செங்கல் சூலை நடத்தினோம். ஒயின்ஷாப் பார் எடுத்து நடத்தினோம். அவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்தார் என்றால் சரிதான். அவர் கேஸ் ஏஜென்ஸி மற்றும் பெட்ரோல் பங்க் வைத்து நடத்தினார் என்றால் சரிதான். அவர் வருமானவரி கட்டியிருந்தார் என்றால் சரிதான். முத்து சிவில் இன்ஜினியர் என்றால் சரிதான். வீராச்சாமியும், முத்துவும் இறந்து சுமார் 4 வருடங்கள் இருக்கும் என்றால் சரிதான்.

7) தாவா சொத்துக்களின் மதிப்பு 100 கோடி இருக்கும் என்றால் சரிதான்.

8) பூர்வீக சொத்துக்களின் மதிப்பு 1 கோடி இருக்கும்.

மு.மா.அ.நீ,

9) நான் சொல்வதுபோல் பூர்வீக சொத்துக்களில் விவசாயம் மூலம் வருமானம் வரவில்லை என்றாலும், அந்த வருமானத்தை கொண்டு எந்த சொத்துக்களும் கிரையம் வாங்கப்படவில்லை என்றாலும், என்னுடைய சகோதரருக்கு அவருடைய தனிப்பட்ட தொழில்கள் மூலம் வந்த வருமானத்தைக்கொண்டு, அவர் பெயரில் சொத்துக்கள் வாங்கினார் என்றாலும், நானும் எனது சகோதரரும் சேர்ந்து எந்த தொழிலும் செய்யவில்லை என்றாலும், நான் பூர்வீக சொத்துக்களுடன் எனது சகோதரர் அவரது தனிப்பட்ட வருமானத்தைக்கொண்டு, கிரையம் வாங்கிய சொத்துக்களையும் சேர்த்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது சகோதரர் பெயரில் உள்ள அவருடைய தனிப்பட்ட சொத்துக்களில் எனக்கு பங்கு கிடையாது என்று சொன்னால் சரியல்ல. அதுபோன்று 5ம் பிரதிவாதி சிவில் இன்ஜினியர் என்றாலும், அவருக்கும் தனிப்பட்ட வருமானம் இருந்து வந்தது என்றாலும், அந்த வருமானத்தைக்கொண்டு 5ம் பிரதிவாதி அவரது பெயரில் தனியாக சொத்துக்கள் வாங்கியிருந்தார் என்றாலும், அந்த சொத்துக்களிலும் நாங்கள் பாகம் கோர முடியாது என்றால் சரியல்ல.

10) 37வது அயிட்ட சொத்து அரசாங்க புறம்போக்கு நிலம் என்றாலும், அந்த இடம் 6ம் பிரதிவாதி அனுபவித்து வந்து, அவருக்கு தனியாக அரசால் பட்டா கொடுக்கப்பட்டது என்றாலும், அந்த இடத்திலும் நாங்கள் பங்கு கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல.

11) 61 மற்றும் 64வது அயிட்ட சொத்துக்கள் அரசு சொத்து என்றாலும், அதில் 1ம் பிரதிவாதிக்கு அரசால் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றாலும், அதிலும் நாங்கள் பாகம் கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல.

12) முத்துக்கருப்பன், முனியன், ரெங்கம்மாள், குமரன், பாலன், சங்கிலி விற்பன்னர், பால்மணி ஆகியோர் பெயர்களில் பட்டா இருப்பதாக நான் சொல்லிவிட்டு, அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காமல் , பாகப்பிரிவினை கேட்பது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

13) 90,91 வது அயிட்ட சொத்துக்கள் தனசேகரன் என்பவருக்கு ஆவண எண்.1596/ 2023 ன் படி கிரைய சொத்து என்றால் அந்த சொத்துக்களை பொறுத்து பாகம் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல.

14) 3ம் தரப்பினர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பாகம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்திருப்பதால், இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

15) 1,5,6,14 முதல் 17 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை இந்த வழக்கில் சேர்த்துக்கொண்டு, நானும் எனது சகோதரிகளும் உண்மைக்கு மாறாக பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை - இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.